# DEPOSTITION OF WITNESS
# IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT MUNSIF, NAGERCOIL
# O.S. No. 133 of 2019

**வா.சா.3**

| | | |
|---|---|---|
| பெயர் | : | இளங்கோ |
| தந்தை பெயர் | : | சின்னநாடார் |
| கிராமம் | : | சுவாமிதோப்பு |
| வட்டம் | : | அகஸ்தீஸ்வரம் |
| தொழில் | : | கூலி |
| வயது | : | 57 |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 09.01.2025

**முதல் விசாரணை** :-

இந்த நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பொற்றையடி பக்கம் ஒத்தபனை இசக்கியம்மன் கோவிலில் வருடம் தோறும் நடைபெறும் கோவில் கொடைக்கு செல்வேன். 2018 கோவில் கொடையில் பிரச்சனை நடந்தது அடிதடி நடந்தது நான் கிளம்பி விட்டேன். 2019 ல் PWD ல் இருந்து அலுவலர் ஆத்துபாலத்தின் மேலிருந்த ஸ்லாப்பு மற்றும் கோவிலில் உள்ள 2, 3 பீடம் ஆகியவற்றை எடுத்து விட்டார்கள் அதன் பிறகு பிரச்சனை என்று சொன்னார்கள் கொடை நடக்கவில்லை அதனால் அதன் பிறகு நான் செல்லவில்லை. ராஜதுரை என்பவர் 15 நாட்களுக்கு ஒரு முறை கோவிலில் விளக்கு போடுவார் அது மட்டும் தான் எனக்கு தெரியும்.

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.19 | -- | வா.சா.3 ன் ஆதார் அடையாள அட்டை | ஒளிநகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது. |

**<u>முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**

**<u>2 முதல் 10 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

பொற்றையடி பக்கம் ஒத்தபனை இசக்கியம்மன் கோவிலில் என்னென்ன சாமி சிலைகள் எத்தனை பீடங்கள் இருந்தது என்றால் மூன்று சாமிசிலைகள் 18 பீடங்கள் இருந்தது. எனது வீடு கோவிலில் இருந்து எவ்வளவு தூரம் என்றால் ஒன்றரை கிலோ மீட்டர் எனது ஊர் சாமிதோப்பு. எனது பூர்வீகம் சாமிதோப்பு என்பதை காட்ட ஆவணம் உள்ளதா என்றால் சொத்து ஆவணம் உண்டு. என்ன சொத்து ஆவணம் உண்டு என்றால் எனது வீடு, கடை, கடைக்கான ஆவணம் உண்டு. பொற்றையடி பக்கம் ஒத்தபனை இசக்கியம்மன் கோவில் எந்த ஆண்டு கட்டப்பட்டது என்றால் தெரியாது. 2018 க்கு பிறகு எத்தனை ஆண்டு பொற்றையடி பக்கம் ஒத்தபனை இசக்கியம்மன் கோவிலில் கொடை விழா நடந்தது என்றால் 2018 க்கு பிறகு கொடை நடத்தப்படவில்லை வழியில் செல்பவர்கள் சிறப்பு மட்டும் நடைபெறும். வழியில் செல்பவர்கள் யார் என்றால் வழியில் செல்பவர்கள் யார்வேண்டுமானாலும் நடத்துவார்கள். பொற்றையடி பக்கம் ஒத்தபனை இசக்கியம்மன் கோவில் பூஜாரி யார் என்றால் ராஜதுரை மற்றும் அவரது வகையறா. ராஜதுரை வகையறா பெயர்கள் என்ன என்றால் ராஜா, நவீன், தங்கை மகள் பத்மா மற்றும் அவரது உடன் பிறந்த சகோதரி பிள்ளைகள். இறுதியாக எப்போது சிறப்பு நடந்தது என்றால் எனக்கு சரியாக தெரியாது. 2018 க்கு முன்பு எத்தனை ஆண்டுகளாக கொடைவிழா நடந்தது என்றால் எல்லா வருடமும் நடந்தது. வருஷத்தில் இரண்டு முறை கொடை விழா நடக்கும். தாவா கோவிலில் எத்தனை கல்வெட்டு உண்டு என்றால் 3 கல்வெட்டு கோவில் நடத்தியவர்கள்

ஒரு கல்வெட்டு வைத்தார்கள் மற்ற இரண்டு கல்வெட்டு புறம்போக்கு இடத்தில் கோவில் கட்டியவர்கள் வைத்தார்கள். கோவிலில் பிரச்சனை செய்த அனந்தம்மை, ஆத்தியப்பன், கணபதி, பாலன் ஆகியோர்கள் மற்ற இரண்டு கல்வெட்டுகளை வைத்தார்கள். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 1 புகைப்படத்தில் முதலாவது புகைப்படத்தில் வலது ஓரம் நிர்ப்பவர் யார் என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ 1 புகைப்படத்தில் இரண்டாவது புகைப்படத்தில் இருப்பது தாவா கோவிலில் உள்ள தேவிசிலை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 புகைப்படத்தில் பத்தாவது புகைப்படத்தில் உள்ள கல்வெட்டில் உள்ள பெயர்கள் யார் என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ 1 புகைப்படத்தில் 11 வது புகைப்படத்தில் நான் சொல்லக்கூடிய ராஜதுரையோ மற்றவர்களோ உள்ளார்களா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ 1 புகைப்படத்தில் 11 வது புகைப்படத்தில் அருள்மிகு இசக்கியம்மன் கோவில் என போர்டு உள்ளதா என்றால் 2017 க்கு பிறகு சமீபத்தில் வைக்கப்பட்ட போர்டுதான் அது. பி.வா.சா.ஆ 1 புகைப்படத்தில் 11 வது புகைப்படத்தில் சாமி ஆடுபவர் ராஜதுரை குடும்பத்தை சார்ந்தவரா என்றால் இல்லை பிரச்சனை செய்தவரில் ஒருவர். எந்த ஆண்டு ஸ்லாப்பினை உடைக்கப்பட்டது என்றால் 2019 ல் PWD உடைத்தது. கோவில் திருவிழா எந்த மாதம் நடைபெறும் என்றால் ஆடி மாதம் 2 ம் செவ்வாய். ராஜதுரைக்கு உறவினரா என்றால் இல்லை. ராஜதுரை க்கு எந்த ஊர் என்றால் சாமிதோப்பு செட்டிவிளை. தாவா கோவில் எந்த ஊரில் உள்ளது என்றால் கரம்பவிளை. தாவா கோவில் திசை என்ன என்றால் தெற்கு திசை. தாவா கோவிலுக்கு எந்த பக்கம் எல்லாம் கால்வாய் உள்ளது என்றால் தெற்கில் உள்ளது. தாவா கோவிலுக்கு கால்வாயை தாண்டி செல்லவேண்டுமா என்றால் ஆமாம் பாலம் போடப்பட்டுள்ளது. பாலத்திற்கு தெற்கில் என்ன உள்ளது என்றால் ரோடு. பாலத்திற்கு தெற்கில் பட்டா சொத்து கிடையாது என்றால் சரிதான். தாவா கோவில் எந்த

ஆண்டு எந்த நபரால் உருவாக்கப்பட்டது என்றால் ராஜதுரை தந்தை தங்கநாடார் காலத்தில் உருவாக்கப்பட்டது வருடம் தெரியவில்லை. தாவா கோவில் உள்ள இடம் யாருடைய இடம் என்றால் ராஜதுரை தந்தை தங்கநாடார். நான் சொல்வது போல் தாவா கோவில்இல்லை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா கோவில் உள்ள இடம் ராஜதுரை தந்தை தங்கநாடார் என சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் கோவிலுக்கு போனதாக சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் பி.வா.சா.ஆ 1 புகைப்படத்தில் இருப்பது யார் என என்னால் சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. எனக்கும் கோவில் இருக்க கூடிய இடத்திற்கும் சம்மந்தமில்லை வாதியிடம் பணம் பெற்றுக் கொண்டு சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு யார் யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எப்படி எனக்கு தெரியும் என்றால் ஊரில் தெரியும் தாமரைகுளம் காவல்நிலையம் மூலமாக தெரியும் பொதுமக்கள் சொல்லி கேள்விபட்டுள்ளேன் அடிதடிநடந்ததை நான் பார்த்தேன். தாமரைகுளம் காவல்நிலைய புகாரில் நான் சாட்சியா என்றால் இல்லை. எனக்கு கோவிலை பற்றி எதுவும் தெரியாது வாதியிடம் பணம் பெற்றுக் கொண்டு சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா கோவில் சம்மந்தமாக குற்ற வழக்கு பற்றி தெரியுமா என்றால் 10 வழக்குக்கு மேல் உள்ளது ராஜதுரை வகையறாக்கு எதிராக கொடுத்தது ராஜதுரை கொடுத்தது . மேற்படி வழக்குகளில் நான் சாட்சியில்லை என்றால் சரிதான்.

**<u>2 முதல் 10 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**